# කාර්ය සාධන වාර්තාව

## செயலாற்றுகை அறிக்கை

# Performance Report

## 2019

ජාතික අයවැය දෙපාර්තමේන්තුව
මුදල් ආර්ථික සහ ප්‍රතිපත්ති සංවර්ධන අමාත්‍යාංශය

தேசிய வரவுசெலவுத் திட்டத் திணைக்களம்
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு

Department of National Budget
Ministry of Finance, Economy and Policy Development

**2019 வருடத்திற்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கை**

**தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்**

**செலவினத் தலைப்பு இல. 240**

## உள்ளடக்க அட்டவணை


1 நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு ........................................................ 4

1.1 அறிமுகம் ........................................................................................................ 4

1.1.1 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று,நோக்கங்கள்..................................... 4

1.2 பிரதான பணிகள்.............................................................................................. 5

1.2.1 எதிர்வரும் வருடத்துக்கான தேசிய வ.செ.தி தயாரிப்பு......................................4

1.2.2 நடைமுறை வருடத்தில் தேசிய வ.செ.தி. செயற்படுத்தல் ................................. 5

1.2.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் ............................................................. 6

வ.செ.தி திணைக்கள நிறுவனக் கட்டமைப்பு.............................................................. 8

2 முன்னேற்ற மற்றும் எதிர்கால தோற்றப்பாடு ............................................................ 9

2.1 ஒதுக்கீட்டுச் சட்டம் 2019, வாக்குப் பதிவுக் கணக்கு - 2019....................................... 9

2.2 வரவு செலவுத் திட்டத் திருத்தங்கள் - 2019............................................................ 10

2.2.1 குறைநிரப்பு மதிப்பீடுகள்.................................................................................... 10

2.2.2 விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள் .................................................................. 11

2.3 செயலாற்றுகைப் பொழிப்பு .................................................................................. 12

2.4 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் ...................................................................... 18

2.5 அரசாங்க செலவின முகாமைத்துவம் ..................................................................... 21

2.5.1 நிதி மாற்றல்கள்................................................................................................. 21

2.5.2 "குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்" கருத்திட்டத்தின் கீழ் நிதி மீள் ஒதுக்கீடுகள் ............................................................... 21

**3 வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை ............................................. 23**

3.1 நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று .................................................................... 23

3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று ................................................................................ 25

3.3 காசுப் பாய்ச்சல் பற்றிய கூற்று .............................................................................. 26

3.4 நிதியற் கூற்றுக்களுக்கான குறிப்புகள் ................................................................... 28

3.4.1 அறிக்கையிடல் அடிப்படைகள்............................................................................

3.5 வருமான சேகரிப்பு செயலாற்றுகை– ஏற்புடையதல்ல ............................................... 29

3.6 ஒதுக்கீட்டுப் பயன்பாட்டின் செயலாற்றுகை ............................................................. 29

3.7 நிதி அல்லாத சொத்து அறிக்கையிடல் செயலாற்றுகை ............................................ 29

3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை ................................................................... 30

**4 செயலாற்றுகைச் சுட்டிகள்........................................................................................ 30**

4.1 செலவினத்தினை முகாமைசெய்வதற்கு வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள்..........30

**5 நிலையான அபிவிருத்தி இலக்குகளின் அடைவு செயலாற்றுகை ................................ 32**

**6 மனித வள விபரம்...................................................................................................... 33**

6.1 பதவியணி முகாமைத்துவம் ....................................................................................... 33

6.2மனித வளங்களில் பற்றாக்குறையும் செயலாற்றுகையும்............................................. 33

6.3 மனித வள அபிவிருத்தி............................................................................................. 33

**7 இணக்கப்பாட்டு அறிக்கை......................................................................................... 42**

# 1 நிறுவனத்தின் விவரம் /நிறைவேற்றுப் பொழிப்பு

## 1.1 அறிமுகம்

தேசிய வரவு செலவுத்திட்ட திணைக்களமானது பாராளுமன்ற சட்டஏற்பாடுகளின் கீழ் தாபிக்கப்பட்ட சட்ட வேலைச் சட்டகத்திற்குள் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் வழிகாட்டலின் கீழ் தொழிற்படுகின்றது. நடுத்தரகால பேரண்டப் அரசிறை வேலைச் சட்டகத்திற்குள் இணங்கும் வகையில் நடுத்தரகால செலவின வேலைச்சட்டகத்தினை (Medium Term Expenditure Framework - MTEF)துறை ரீதியான அடிப்படையில் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளை தயாரிக்கும் மைய நிறுவனமாக இத்திணைக்களம் தொழிற்பாடுகின்றது. இச்செயன்முறையானது நிரல் அமைச்சுக்கள், திணைக்களங்கள், அரசாங்கத்தின் நியதிச் சட்ட நிறுவனங்கள் மற்றும் தொடர்புடைய திறைசேரித் திணைக்களங்கள் என்பவற்றுடன் தொடரான உசாவுகையின் பெயரில் மேற்கொள்ளப்படுகின்றது.

### 1.1.1 நிறுவனத்தின் தூரநோக்கு, பணிக்கூற்று,நோக்கங்கள்

**தூரநோக்கு**

"நிதி வளங்களின் வினைத்திறன் மிக்க ஒதுக்கீட்டினூடாக சமூகப் பொருளாதார அபிவிருத்தி"

**பணிக்கூற்று**

அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்கு அரசாங்க பொருட்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட சேவைகளின் வினைத்திறன் மிக்க வழங்கலுக்காக பொது நிதி வளங்களின் மதிப்பீடு மற்றும் ஒதுக்கீடு.

**நோக்கங்கள்**

- நிதி வளங்களின் பயன்வலு மற்றும் வினைத்திறன் மிக்க ஒதுக்கீட்டின் ஊடாக மக்களின் சமூகப் பொருளாதார அபிவிருத்தியினை உறுதிப்படுத்துதல்.
- அரசிறை ஒழுங்குகளைப் பேணுதல்
- அரசிறை வளர்ச்சியினை உறுதிப்படுத்துதல்
- சிறந்த மதிப்பீட்டுக்கான கற்றல் மற்றும் பகிர்வு

## 1.2 பிரதான பணிகள்

### 1.2.1 எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வ.செ.தி. தயாரிப்புச் செயன்முறை

எதிர்வரும் வருடத்திற்கான தேசிய வரவுசெலவுத் திட்டத்தை தயாரிப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- ஏனைய திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடி நடுத்தரகால வரவுசெலவுத்திட்ட வேலைச்சட்டகத்தினை பூர்த்திசெய்வதுடன் அதற்கான அமைச்சரவை அங்கீகாரத்தினையும் பெற்றுக்கொள்ளல்.
- வரவு செலவுத் திட்ட அழைப்பை விநியோகித்தல்.
- செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடி வரைவு மதிப்பீடுகளைத் தயாரித்தல்.
- செலவின முகவராண்மைகளுடன் வரவுசெலவுத்திட்ட கலந்துரையாடல்கள் / மதியுரைக் கூட்டங்கள்.
- ஏனைய திறைசேரித் திணைக்களங்களுடன் கலந்துரையாடி வருமானம்/செலவினம்/ நிதியிடல்/ கடன்பெறும் (உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு) வரையறைகளைத் தீர்மானித்தல்
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான மதிப்பீடுகளை பூரணப்படுத்தல்.
- சட்டமா அதிபர் மற்றும் சட்ட வரைஞரிடமிருந்துவரைவு ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்திற்கான சட்ட அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்காக அமைச்சரவையின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்ட மூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல். (முதலாவது வாசிப்பு)
- வரைவு மதிப்பீட்டினை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலமொழிகளில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்டமூலம் மீதான இரண்டாவது வாசிப்பு விவாதத்தில் பங்குபற்றல்.
- வரவு செலவுத் திட்டத்தின் மூன்றாவது வாசிப்பு - குழுநிலை விவாதத்தில் பங்குபற்றுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட மதிப்பீடுகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்டமூலத்திற்கான குழு நிலைத் திருத்தங்களை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.
- ஆணைப்பத்திரத்தினைத் தயாரித்தல் மற்றும் கௌரவ நிதிஅமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறுதல்.
- செலவின அதிகாரமளிப்புச் சுற்றுநிருபத்தினை விநியோகித்தல்.

### 1.2.2 நடைமுறை வருடத்தில் தேசிய வரவுசெலவுத் திட்டத்தினைச் செயற்படுத்தல்

தேசிய வரவு செலவுத்திட்டத்தினை செயற்படுத்துவதற்காக பின்வரும் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- அங்கீகாரமளித்தல் உள்ளடங்களாக வரவு செலவுத்திட்டச் செயற்படுத்துகை தொடர்பான வழிகாட்டல்களையும் சுற்றுநிருபங்களையும் வெளியிடுதல்.
- அங்கீகரிக்கப்பட்ட வரையறைகள் மற்றும் பராமரிக்கப்படும் அரசிறை ஒழுங்குகளுக்குள் குறிப்பிடப்பட்ட நோக்கங்களுக்காக நிதி வினைத்திறனாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதனை உறுதிப்படுத்துவதற்கு கட்டுப்பாடுகளை விதித்தல்.
- தொழிற்பாட்டு வினைத்திறனை உறுதிப்படுத்துவதற்கு செலவின முகவராண்மைகளுடன் கலந்துரையாடுதல்.
- நியதிச்சட்ட சபைகளுக்காக காசு விடுவிப்பதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு பரிந்துரைகளை வழங்குதல்.
- நிதி வளங்களை ஒதுக்கீடு செய்தல் தொடர்பான அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கான அவதானிப்புகளை தயாரித்தல்.
- ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் நிதி ஏற்பாடுகளை மீள் ஒதுக்கீடுசெய்தல்.
- வருடாந்த வரவுசெலவுத்திட்டத்தின் சுமுகமான செயற்பாட்டினை உறுதிப்படுத்துவதற்கு நி.பி.கு. 66/69 இன் கீழ் ஒதுக்கீட்டினை மாற்றுவதற்கான அங்கீகாரத்தினை வழங்குதல்.
- வெளிநாட்டு நிதியளிப்பின் கீழ் நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற வெளிநாட்டு நிதியளிப்பு நிறுவனங்களுக்கு வசதியளித்தல்.
- அரச கணக்குகள் குழு, அரச நிதிக் குழு, அரச தொழில் முயற்சிகள் மீதான குழு மற்றும் பாராளுமன்ற கூட்டங்களில் திறைசேரியினைப் பிரதிநிதித்துவப்படுத்துதல்.
- பாராளுமன்ற குழுக்கள், சனாதிபதியின் கூட்டங்கள் மற்றும் பிரதமரின் கூட்டங்களில் திறைசேரியினை பிரதிநிதித்துவப்படுத்தல்.

### 1.2.3 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

- வர்த்தக, களஞ்சியசாலைகள், அரசாங்க அலுவலர்கள் முற்பணக் கணக்குகளுக்கான வரையறைகளைத் தீர்மானித்தல்.
- தேவையான போது முற்பணக் கணக்குச் செயற்பாட்டு வரையறைகளைத் திருத்துவதற்கான நடவடிக்கை எடுத்தல்.

### 1.2.4 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளை மீள் ஒதுக்கீடுசெய்தல்

- பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்ட அங்கீகாரத்தின் பின்னர் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் தொடர்பான வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளை மீள் ஒதுக்கீடுசெய்தல்.




**நிறுவனக் கட்டமைப்பு**

தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களம்

# 2 முன்னேற்ற மற்றும் எதிர்கால தோற்றப்பாடு

திணைக்களம் இரண்டு வாக்குப் பதிவுக் கணக்குகளையும், ஒதிக்கீட்டுச் சட்டமொன்றையும் 32 குறைநிரப்பு மதிப்பீடுகளையும் கையாண்டுள்ளது என்ற வகையில், 2019 ஆண்டானது தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திற்கான நெருக்கடியான வேலைப் பழுமிக்கசவால் நிறைந்த வருடமொன்றாகும்.

குறித்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாக பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்ட வாக்குப் பதிவுக் கணக்கொண்றுடன் ஆரம்பமான குறித்த வருடமானது, முன்னைய வருடத்திற்கு மாற்றமாக 2019 இற்கான வரவுசெலவுத்திட்டமானது பாராளுமன்ற வரலாற்றில் குறிப்பிடத்தக்க நிகழ்வொன்றாக காணப்பட்டதுடன் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டமை தேசிய வரவுசெலவுத்திட்டத் திணைக்களத்திற்கு குறிப்பிடத்தக்க அதிகளவு வேலைப்பழுவினை ஏற்படுத்தியது. குறித்த வருடத்தின் போது பல்வேறு அமைச்சரவை பதவி மாற்றங்கள் ஏற்பட்டமை ஏற்கனவே காணப்பட்ட வேலைப் பழுவினை மேலும் அதிகரிக்கச்செய்தது.

வருடத்தின் இறுதியில் சனாதிபதித் தேர்தல் நடைபெறுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது என்ற வகையில், 2020 வரவுசெலவுத்திட்டமானது பிற்போடப்பட்டதுடன் மாற்றீட்டு ஏற்பாடொன்றாக வாக்குப் பதிவுக் கணக்கொன்று மீண்டும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## 2.1 ஒதுக்கீட்டுச் சட்டம் 2019, வாக்குப் பதிவுக் கணக்கு - 2019

சம்பிரதாயபூர்வமாக, முடிவடைந்த முன்னைய வருட இறுதியில் குறித்த வருடத்திற்கான ஒதுக்கீட்டுச் சட்டம் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருத்தல்வேண்டும்.2018ஒக்ரோபர் இறுதியில் பாராளுமன்றம் திடீரென கலைக்கப்பட்டதன் காரணமாக 2019 இற்கான மதிப்பிடப்பட்ட செலவினத்தினைக் கொண்டிருந்த ஒதுக்கீட்டுச் சட்ட மூலம் 2018செப்ரெம்பரில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டகுறித்த சட்ட மூலம் தொடர்ந்து முன்னெடுக்கப்படவில்லை. இதற்கு மாற்றீட்டு ஏற்பாடாக நிதி அமைச்சரினால் அரசாங்கத்தின் தொழிற்பாடுகளை எவ்வித தடையுமின்றி முன்னெடுப்பதற்கு திரட்டிய நிதியத்திலிருந்து பணத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான அதிகாரத்தினைப் பெறும் வகையில் ஒதுக்கீட்டுச் சட்டமொன்று அங்கீகரிக்கப்படும்வரை வாக்குப்பணக் கணக்கொன்று பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது. 2019 இன் முதல் நான்கு மாதங்களுக்கான செலவின மதிப்பீடுகள் உள்ளடக்கப்பட்டிருந்தவாக்குப்பதிவுக் கணக்கு2019 ஆனது 2018 டிசம்பர் 21 ஆந் திகதி பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டது.

பின்னர், 2019 பெப்ரவரி 05அன்றுவாக்குப் பதிவுக் கணக்கு மீதான வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகளை ஒன்றிணைத்துஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2019நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. இந்த சட்டமூலம் 2019 ஆம் ஆண்டின் 06 ஆம் ஆண்டு ஒதுக்கீட்டுச் சட்டமாக மாற்றப்பட்டது. விவாதத்தின் மூன்றாவது வாசிப்பில் இலங்கை நாடாளுமன்ற வரலாற்றில் இரண்டாவது முறையாக 31 செலவினத் தலைப்புகள் 2019 மார்ச் 29 அன்று தோற்கடிக்கப்பட்டது. அதன்படி, அனைத்து 09 மாகாண சபைகளும், 20 மாவட்ட செயலகங்களும், மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் வரும் 02 செலவினத் தலைப்புகளும் குறித்த செலவினத் தலைப்புகளை பூச்சிய செலவின மதிப்பீடுகளாக மாற்றும் வகையில் தோற்கடிக்கப்பட்டன.

## 2.2 வரவு செலவுத் திருத்தங்கள் - 2019

பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தினால் குறைநிரப்பு மதிப்பீடுகளின் அங்கீகாரத்தின் மூலம் திருத்தப்படுகின்றன அல்லது நிதி அமைச்சரினால் விநியோகிக்கப்படுகின்ற விசேட சட்ட ஆணைப்பத்திரங்களின் மூலம் திருத்தப்படுகின்றன.

### 2.2.1 குறைநிரப்பு மதிப்பீடுகள்

கடந்த இரண்டு தசாப்தங்களில் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட குறைநிரப்பு மதிப்பீடுகளில் ஆகக் கூடிய எண்ணிக்கையினை 2019 ஆம் ஆண்டில் பதிவாக்கியுள்ளது. குறித்த காலப்பகுதியின்போது 32 குறைநிரப்பு மதிப்பீடுகள் பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

உள்நாட்டு மற்றும் உள்ளக அலுவல்கள் மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு மற்றும் மாநகர மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சுக்களின் கீழ் வருகின்ற 31செலவினத் தலைப்புகள் 2019 மார்ச் 29ஆம் திகதி பாராளுமன்றத்தில் தோற்கடிக்கப்பட்டதன் விளைவாக குறித்த தோற்கடிக்கப்பட்ட செலவின தலைப்புகளுக்கான வரவு செலவுத்திட்ட ஏற்பாடுகளை பெற்றுக்கொள்ளும் நோக்கத்தில் பாராளுமன்றத்தில் ஒதுக்கீட்டுச் சட்டம் அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் அரசாங்கம் 2019ஏப்ரல் 05ஆந் திகதி ரூபா 287.9பில்லியன் பெறுமதியான குறைநிரப்பு மதிப்பீடுகளை சமர்ப்பித்தது.

முன்னைய இரண்டு வருடங்களைத் தொடர்ந்து நெடுஞ்சாலைகள் மற்றும் வீதி அபிவிருத்தி அமைச்சானது வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட கருத்திட்டங்களின் கொடுப்பனவுகளைத் தீர்த்தல் முற்பணங்களுக்கான கொடுப்பனவுகள் மற்றும் உள்நாட்டு கடன் தவணை மீள் கொடுப்பனவுகள் என்பவற்றுக்காக ரூபா 65பில்லியன் குறைநிரப்பு மதிப்பீட்டினை 2019இல் பாராளுமன்றத்தில்

சமர்ப்பித்தது. இந்த குறைநிரப்பு மதிப்பீடானது 2019யூன் 20ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது.

### 2.2.2 விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள்

நிதி அமைச்சர் அரசியல் அமைப்பின் மூலம் விசேட சட்ட ஆணைப்பத்திரங்களை விநியோகிப்பதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளதுடன் குறித்த ஆணைப்பத்திரங்கள் அரசாங்க செலவினங்களை மேற்கொள்வதற்கு திரட்டு நிதியத்திலிருந்து பணத்தினை மீளப் பெறுவதற்கான அதிகாரத்தினை வழங்குவதுடன் குறித்த ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணையில் காணப்படும் விசேட சட்ட சேவைகளுக்கேற்ப அங்கீகரிக்கப்படுகின்றது. ரூபா 23.2 பில்லியன் பெறுமதியான அவ்வாறான ஆறு (6) விசேட சட்ட ஆணைப்பத்திரங்கள் கீழே அட்டவணை 2.2.2 இல் குறிப்பீடு செய்யப்பட்ட நோக்கங்களுக்கான மேலதிக நிதியினைப் பெற்றுக்கொள்ளும் வகையில் 2019 இல் நிதி அமைச்சினால் விநியோகிக்கப்பட்டது.

**அட்டவணை 2.2.2: குறைநிரப்பு ஒதுக்கீடுகளாக விசேட சட்டஆணைப்பத்திரங்கள்**

| அதிகார இல. | செலவினத் தலைப்பு இல. | நிறுவனம் | நோக்கம்/குறிக்கோள் | தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 01 | 22 | நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரின் அலுவலகம் | பாராளுமன்ற தீர்மானத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிர்வாகத்துக்கான பாராளுமன்ற ஆணையாளரின் சம்பளம், கொடுப்பனவுகளை செலுத்துதல் | 1,320,000 |
| 02 | 10 | இலஞ்சம் அல்லது ஊழல்கள் பற்றிய சாத்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு | ஆணைக்குழு உறுப்பினர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை செலுத்துதல் | 1,240,000 |
| 03 | 253 | ஓய்வூதியத் திணைக்களம் | அரசாங்க ஊழியர்களின் விதவைகள், தபுதாரர்கள், அனாதைகள் ஓய்வூதியத்திற்கான ஏற்பாட்டுப் | 2,500,000,000 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | பற்றாக்குறையினை ஈடுசெய்தல் | |
| 04 | 249 | திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம் | படுகடன் சேவை மீதான ஒதுக்கீட்டுப் பற்றாக்குறையினை ஈடுசெய்வதற்கு மேலதிக நிதி ஒதுக்கீடு | 20,530,000,000 |
| 05 | 239 | வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் | ஆசிய உட்கட்டமைப்பு வங்கி சுற்றுநிருப இல. 7/2016 இன்படி 2015 இலிருந்து 2019 ஆசிய உட்கட்டமைப்பு வங்கி கட்டண பங்களிப்பு | 160,600,000 |
| 06 | 1 | அதிமேதகு சனாதிபதி | முன்னாள் சனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கான இளைப்பாறல் நன்மைகளை வழங்குதல் | 146,250 |
| **மொத்தம்** | | | | 23,193,306,250 |

## 2.3 செயலாற்றுகைப் பொழிப்பு

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | விளைவு |
|---|---|---|---|
| 1. 2019 வ.செ.தி. செயற்படுத்துகை மற்றும் செலவின முகாமைத்துவம்<br><br>(2019 ஒதுக்கீட்டு சட்டத்துக்கு முந்தைய ஆண்டில் (2018) பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட வில்லை, மேலும் 2019 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாத கணக்கு மீதான வாக்களிப்பின் கீழ் இயங்கின.) | செலவு முகாமைத்துவம் குறித்த வழிமுறைகளை வழங்கும் வ.செ.தி. அங்கீகார சுற்றறிக்கைகளை வழங்குதல். | பொதுச் செலவுகளை திறமையாக நிர்வகித்தல். | 2019 ஜனவரி 1 முதல் 2019 ஏப்ரல் 30 வரையிலான காலத்திற்கான செலவினங்களை அங்கீகரிப்பதற்காக2018.12.27 தேதியிட்ட தேசிய வ.செ.தி. சுற்றறிக்கை இல. 5/2018 வெளியிடப்பட்டது. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | விளைவு |
|---|---|---|---|
| 2.தேசிய வ.செ.தி. மதிப்பீடுகளை தயாரித்தல், 2019 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு சட்டத்தை நாடாளுமன்றத் தில் சமர்ப்பித்தல்.<br><br>(வழக்கம் போல் ஆண்டின் தொடக்கத்தில் 2019 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டம் இல்லாத நிலையில், தொடர்புடைய நடவடிக்கைகள் 2019 இல் செய்யப்பட்டன) | வரைவு ஆண்டு வ.செ.தி. தயாரித்தல் 2019 ஆம் ஆண்டிற்கான மதிப்பீடுகள் செலவு முகவர் மற்றும் பொது திறைசேரியின் தொடர்புடைய துறைகளுடன் கலந்தாலோசித்தல். | அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் மேம்பாட்டு இலக்குகளின் ஆண்டு இலக்குகளை அடைவதை உறுதிசெய்தல். | வ.செ. திட்டத்துக்கு முந்தைய கூட்டங்கள் முந்தைய ஆண்டில்நடத்தப்பட்டதால், அமைச்சர்கள் அமைச்சரவையின் புதிய கட்டமைப்பைக் கொண்டு மதிப்பீடுகள் இறுதி செய்யப்பட்டன. |
| | 2019 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு மசோதாவை சரியான நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தேவையான ஏற்பாடுகளை செய்தல். | ஒதுக்கீட்டுச் சட்டத்தை2019 பிப்ரவரி முதல் வாரத்தில் பாராளுமன்றத்தில் முன்வைத்தல்.<br><br>2019 விபரமான மதிப்பீடுகளைத் தயாரித்தல் மற்றும் அச்சிடல்<br><br>ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நாடாளுமன்றத்தி ல் நிறைவேற்றல். | 2019 இன் விரிவான மதிப்பீடுகளை சரியான நேரத்தில் அச்சிடுதல்.<br><br>2019 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2019.01.11 அன்றைய வர்த்தமானி.<br><br>ஒதுக்கீட்டுச் சட்டமூலம் 2019.02.05 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>வரவுசெலவுத்திட்டம் (இரண்டாவது வாசிப்பு) 2019.03.05 அன்று |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | விளைவு |
| --- | --- | --- | --- |
| | கௌரவ நிதி அமைச்சரினால் ஆணைப்பத்திரம் வெளியிடல். | செலவினத்தினை அங்கீகரித்தல் | பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டது.<br><br>ஒதுக்கீட்டுச் சட்டம் 2019.04.05 ஆந் திகதி பாராளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டது.<br><br>அதேதினத்தில் கௌரவ சபாநாயகரினால் 2019 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டம் சான்றுப் படுத்தப்பட்டது.<br><br>2019.04.06 ஆந் திகதி கௌரவ நிதி அமைச்சரினால் ஆணைப்பத்திரம் விநி யோகிக்கப்பட்டது. |
| 3. 2019 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தைச்செய ற்படுத்தல் மற்றும் செலவு முகாமைத்துவம். | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 5 (1) மற்றும் நி.பி. 66 மற்றும் 69 ன் கீழ் நிதி பரிமாற்றஅங்கீகார ம். | அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்குள் செலவுகளை நிர்வகித்தல். | கூறப்பட்ட விதிமுறைகளின்படி, 379 விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.அதில், 51 பயன்பாடுகள் நிரல் இடமாற்றங்கள் மற்றும் 328 திட்ட இடமாற்றங்கள். நி.பி.கு.69 இன் விதிகளின் கீழ் 77 பரிமாற்ற விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டன. |
| | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6 ஆம் பிரிவின் கீழ் ஏற்பாடுகளை மீள் ஒதுக்கீடுசெய்தல். | செலவின முகவராண் - மைகளின் சுமூகமான செயல்பாட்டை உறுதி செய்வதற்காக கூடுதல் ஒதுக்கீடு தேவைகளை வழங்குதல். | ரூபா 159.77 பில்லியன் எதிர்பாராத செலவினங்களை (வெள்ளம், வரட்சி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல், போன்ற) பூர்த்தி செய்வதற்காக இந்த ஆண்டில் 736 எண்ணிக்கையிலான துணை ஒதுக்கீடு கடிதங்கள் மூலம் விநியோகிக்கப்பட்டதுடன் செலவு மதிப்பீடுகளின் சில விலகல்களை சந்தித்தல். |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | விளைவு |
|---|---|---|---|
| | இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பாராளுமன்றத்திற்கு துணை ஒதுக்கீடு வழங்குவது தொடர்பான துணை அறிக்கைகளை சமர்ப்பித்தல் | ஒதுக்கீட்டுச் சட்டத்தின் விதிகளை பின்பற்றுதல் | வழங்கப்பட்ட அனைத்து துணை ஒதுக்கீடுகளையும் உள்ளடக்கிய 08 அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டன. |
| | 2019 ஆம் ஆண்டின் எண் 06 ஒதுக்கீட்டுச் சட்டத்தில் திருத்தம். | 2019 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 (1) (பி) இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட கடன் வரம்பைத் திருத்தவும் | திருத்தத்திற்கான சட்ட மூலம் 2019 நவம்பர் 29அன்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டது. இருப்பினும், பாராளுமன்றத்தின் காலவரையறை காரணமாக இது இயற்றப்படவில்லை. |
| 4. 2020 ஆம் ஆண்டிற்கான தேசிய வ.செ.திட்ட மதிப்பீட்டைத் தயாரித்தல் மற்றும் உருவாக்குதல். | வருடாந்த வ.செ.தி. மதிப்பீடுகளைத் தயாரிப்பது குறித்த (வ.செ.தி. அழைப்பு) வழிகாட்டுதல்களை வழங்குதல். | அனைத்து செலவு நிறுவனங்களின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றி ஆண்டு வரவு செலவுத் திட்டத்தை உருவாக்குங்கள். | முன்னுதாரணங்களைக் கருத்திற் கொண்டு2019.08.13அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், ஜனாதிபதித் தேர்தல் 2019 ஆம் ஆண்டின் இறுதியில் நடைபெறவிருந்ததால், 2020 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை தயாரிப்பதைத் தொடங்குவதைத் தள்ளிவைக்க முடிவு செய்தது. திட்டமிடப்பட்டபடி அழைப்பு வழங்கப்பட்டதுடன் வ.செ.திட்டஅட்டவணையில் மீதமுள்ள நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டன. |
| | வரைவு வருடாந்த வ.செ.திட்டத்தைத் தயாரித்தல் செலவு முகவர் மற்றும் பொதுத் திறைசேரி தொடர்புடைய துறைகளுடன் கலந்தாலோசித்து மதிப்பீடுகள். | அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் மேம்பாட்டு இலக்குகளின் ஆண்டு இலக்குகளை அடைவதை உறுதிசெய்தல். | |
| | தொடர்புடைய அமைச்சுக்களுடன் வ.செ.தி. கலந்துரையாடல்க | ஒதுக்கீட்டு சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்தல். | |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | விளைவு |
|---|---|---|---|
| | ளை நடத்துதல். | | |
| | 2020 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டு மசோதாவை சரியான நேரத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க தேவையான ஏற்பாடுகளை செய்யுங்கள். | 2020 இன் விரிவான மதிப்பீடுகளைத் தயாரித்து அச்சிடுதல். | |
| | கௌரவ நிதி அமைச்சர் வழங்கிய உத்தரவாதங்களை வழங்குதல். | ஒதுக்கீட்டு மசோதாவை நாடாளுமன்றத்தால் நிறைவேற்றல். | |
| 05.2020 இன் முதல் நான்கு மாதங்களுக்கு வாக்குப் பதிவுக் கணக்குதயாரித்தல் | 2020 ஆம் ஆண்டின் முதல் நான்கு மாதங்களுக்கான செலவு நிறுவனங்களுக்கான வ.செ.திட்டமதிப்பீடுகளைத்தயாரித்தல்<br><br>வாக்குப் பதிவுக் கணக்கை அங்கீகாரத்துக்காக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல்.<br><br>கௌரவ நிதி அமைச்சரினால் ஆணைப்பத்திரங்களை வெளியிடுதல்<br><br>செலவு முகாமைத்துவம் குறித்த வழிமுறைகளை | ஒதுக்கீட்டுச் சட்டம் இல்லாத நிலையில் அரசாங்க நடவடிக்கைகளை தடையின்றி தொடர்வதற்கான வசெ.திட்ட ஏற்பாடுகளைச் செய்தல்.<br><br>செலவினத்திக்கு அதிகாரமளித்தல் | கௌரவ நிதி அமைச்சரினால் 2019.10.31 அன்று ஆணைப்பத்திரம் பிறப்பிக்கப்பட்டது.<br><br>ஜனாதிபதித் தேர்தலுக்குப் பிறகு மந்திரி இலாகாவின் கட்டமைப்பு மாற்றப்பட்டதால்,2019.12.31அன்று வசெ.திட்டசுற்றறிக்கை இல. 2019.12.31அன்று முற்பணப் பதிவுக் கணக்கினால் அங்கீகரிக்கப்பட்ட வசெ.திட்ட விதிகளை புதிய அமைச்சுக்கு மறு ஒதுக்கீடு செய்வதன் மூலமும் முற்பணப் பதிவுக் கணக்கின் கீழ் செலவினங்களை அங்கீகரிப்பதன் மூலமும் வெளியிடப்பட்டது. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | விளைவு |
|---|---|---|---|
| | வழங்கும் அங்கீகார சுற்றறிக்கைகளை வெளியிடுதல். | | |
| 06. தேசிய வ.செ.தி. முகாமைத்துவம் | அறிக்கைகளைச் சமர்ப்பித்தல் | கடைசித் திகதிக்கு முன்னர் அறிக்கைகளை சமர்ப்பித்தல்<br>(அ) நிதி, வெகுசன ஊடக அமைச்சின் வருடாந்த அறிக்கையில் செலவின மீளாய்வு<br>(ஆ)திணைக்களத்தின் செயற்திறன் அறிக்கை<br>(இ) அரசாங்க அலுவலர்கள் முற்பணக் கணக்கு | பின்வரும் அறிக்கைகள் உரியநேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டது<br>(அ)செலவின மீளாய்வு – 2019<br>(ஆ) செயலாற்றுகை அறிக்கையினை பாராளுமன்றுக்கு சமர்ப்பித்தல்<br>(இ) ஒதுக்கீட்டுச் சட்டம் 2019<br>(ஈ) 2019 அரசாங்க ஊழியர் முற்பணக் கணக்கு 2019 |
| | திறன் விருத்தி | உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி மூலம் மனித வளங்களை வளர்த்துக் கொள்ளல். | 16 அதிகாரிகளுக்கு வெளிநாடுகளில் பயிற்சி அளிக்கப்பட்டது, ஒவ்வொரு அதிகாரிகளுக்கும் தேசிய வ.செ. திட்டத் திணைக்களத்தின் செயல்பாடுகள் தொடர்பான திட்டங்கள் குறித்து உள்நாட்டில் பயிற்சி அளிக்கப்பட்டது. |
| | திணைக்கள முற்பணக் கணக்குகளை கட்டுப்படுத்தல் | முற்பணக்கணக்குகளின் வரம்புகளுக்கு இணங்க தே.வ.செ. திட்டத்தின் ஊழியர்களின் அனைத்து விண்ணப்பதாரர்களுக்கும் கடன்கள் / முன்கூட்டியே வழங்குதல். | அங்கீகரிக்கப்பட்ட வரம்புகளை கடைபிடிக்கும் போது, துன்பக் கடன்கள், சைக்கிள் கடன்கள், சிறப்பு முன்கூட்டியே மற்றும் ரூபா 6,318,29.00 வரை பண்டிகை முற்பணங்கள் வழங்கப்பட்டுள்ளன. |

| நடவடிக்கை | செயற்பாடு | பொதுவான இலக்கு | விளைவு |
|---|---|---|---|
| | கணக்காய்வு வினாக்களுக்கு பதிலளித்தல் | கணக்காய்வு வினவல்களைக் குறைத்தல். பாராளுமன்றத்தின் COPA, COPE மற்றும் COPF கூட்டங்களை பிரதிநிதித்துவப்படுத்துதல். | கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தால் அனுப்பப்பட்ட அனைத்து கணக்காய்வு கேள்விகளுக்கும் (09) பதிலளிக்கப்பட்டது. |
| 07.வெளிநாட்டு அபிவிருத்தி பங்காளர்களுக்கு வசதி ஏற்படுத்தல் (ச.நா.நி., உலக வங்கி, ஆ.அ.வ) | அபிவிருத்தி கூட்டாளர்களுடன் கலந்துரையாடலில் பங்கேற்றல். | அபிவிருத்தி பங்காளர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குதல். | அபிவிருத்தி பங்காளர்களுடன் சிறந்த ஒருங்கிணைப்பினைப்பேணுதல். |

## 2.4 முற்பணக் கணக்குச் செயற்பாடுகள்

முற்பணக் கணக்குச் செயற்பாடுகளின் உண்மையான செலவினம் மதிப்பீடு செய்யப்பட்ட ஆகக்கூடிய செலவினமான ரூபா 27.3பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 26.1பில்லியனாகக் காணப்பட்டது. உண்மையான மொத்த பெறுகையானது மதிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த பெறுகையான ரூபா 21.4பில்லியனுடன் ஒப்பிடுகையில் ரூபா 24.4பில்லியனாகக்காணப்பட்டது. இதற்கமைவாக முற்பணக் கணக்கு செயற்பாடுகள் 2019இன்06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் அங்கீகரிக்கப்பட்ட வரையறைகளுக்குள் காணப்பட்டன. முற்பணக் கணக்கின் கீழான செயற்பாடுகள் ஆதனக் கடன் நீங்களாக அரசாங்க ஊழியர்களுக்கான வர்த்தக இயல்புடைய மற்றும் முற்பணச் செயற்பாடுகளை உள்ளடக்கியிருந்தது.

2019 இன் 06 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ் வரையறை திருத்தமானது பின்வரும் 19 அமைச்சுக்கள் / திணைக்களங்களுக்கு மேற்கொள்ளப்பட்டது.

| இ ல. | அமைச்சு/ திணைக்களம் | விடய இல. | II நிரலில் ஆகக்கூடிய செலவின வரையறை (ரூபா) | | IIIநிரலில் பெறுகைகளின் ஆக்க்குறைந்த வரையறைகள் (ரூபா) | | IV நிரலில் ஆகக்கூடிய கடன் மீதி வரையறை (ரூபா) | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | இருந்து | வரை | இருந்து | வரை | |
| 1 | பிரதமரின் அலுவலகம் | 00201 | 23,000,000 | 21,000,000 | 11,000,000 | 9,500,000 | 77,000,000 | 76,500,000 | 1 |
| 2 | தேர்தல்தல்கள் ஆணைக்குழு | 02001 | | | 18,000,000 | 20,000,000 | 95,000,000 | 115,000,000 | 2 |
| 3 | தேசிய பெறுகை ஆணைக்குழு | 02401 | 1,200,000 | 2,100,000 | | | 3,000,000 | 4,000,000 | 3 |
| 4 | டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சரவை அல்லாத அமைச்சர் | 05101 | | | 2,500,000 | 1,300,000 | | | 4 |
| 5 | அமைச்சரவை அல்லாத அறிவியல், தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர் | 05201 | | | 22,300,000 | 20,000,000 | | | 5 |
| 6 | பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் பொது வழங்கல் அமைச்சரவை அல்லாத அமைச்சர் | 05301 | | | 2,500,000 | 170,000 | | | 6 |
| 7 | தொழிலாளர் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சரவை அல்லாத அமைச்சர் | 05401 | | | 4,400,000 | 3,200,000 | | | 7 |
| 8 | வெகுசன ஊடக அமைச்சரவை அல்லாத | 05501 | 1,000,000 | 3,500,000 | 200,000 | 2,500,000 | 6,000,000 | 25,000,000 | 8 |

| இ ல. | அமைச்சு/ திணைக்களம் | விடய இல. | II நிரலில் ஆகக்கூடிய செலவின வரையறை (ரூபா) | | III நிரலில் பெறுகைகளின் ஆக்க்குறைந்த வரையறைகள் (ரூபா) | | IV நிரலில் ஆகக்கூடிய கடன் மீதி வரையறை (ரூபா) | | கட்டளை இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | இருந்து | வரை | இருந்து | வரை | இருந்து | வரை | |
| | அமைச்சர் | | | | | | | | |
| 9 | விசேட பிரதேசங்கள் மேம்பாட்டு அமைச்சரவை அல்லாத அமைச்சர் | 05601 | | | 300,000 | 120,000 | | | 9 |
| 10 | பொது நிர்வாகம் மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் | 13001 | 40,000,000 | 65,000,000 | 23,200,000 | 42,000,000 | 85,000,000 | 206,000,000 | 10 |
| 11 | பொது நிறுவன, கண்டிய பாரம்பரிமற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் | 15801 | 4,200,000 | 5,700,000 | 2,000,000 | 2,500,000 | | | 11 |
| 12 | பௌத்த அலுவல்கள் திணைக்களம் | 20101 | | | 21,000,000 | 20,500,000 | | | 12 |
| 13 | இலங்கை கடற்படை | 22301 | | | 510,000,000 | 440,000,000 | | | 13 |
| 14 | இலங்கை விமானப்படை | 22401 | | | 418,000,000 | 380,000,000 | | | 14 |
| 15 | பொலிஸ் திணைக்களம் | 22501 | | | 1,080,000,000 | 1,060,000,000 | | | 15 |
| 16 | கடன் இணக்கசபை திணைக்களம் | 23101 | | | 500,000 | 449,000 | | | 16 |
| 17 | மாவட்ட செயலகம், மன்னார் | 26501 | | | 11,000,000 | 10,932,000 | | | 17 |
| 18 | வனவளத் திணைக்களம் | 28301 | | | 71,000,000 | 66,000,000 | | | 18 |
| 19 | சமுர்தி அபிவிருத்தித் திணைக்களம் | 33101 | | | 275,000,000 | 255,000,000 | | | 19 |

## 2.5 அரசாங்கசெலவின முகாமைத்துவம்

### 2.5.1 நிதி மாற்றல்கள்

பொதுவாக பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் பாராளுமன்றத்தினால் குறைநிரப்பு மதிப்பீடுகளின் அங்கீகாரத்தின் மூலம் திருத்தப்படுகின்றன அல்லது நிதி அமைச்சரினால் விநியோகிக்கப்படுகின்ற விசேட சட்ட ஆணைப்பத்திரங்களின் மூலம் திருத்தப்படுகின்றன. இந்த வகையில் 2019வரவு செலவுத்திட்டமானது கீழே அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவாறு அவ்வாறான திருத்தத்திற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

### 2.5.2 “குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள்” கருத்திட்டத்தின் கீழ் நிதி மீள் ஒதுக்கீடுகள்

பொதுவாக செலவினத் தலைப்பு 240இன் கீழ் குறைநிரப்பு ஒத்துழைப்பு சேவைகள் மற்றும் எதிர்பாரா பொறுப்புக்கள் கருத்திட்டமானது 2019இல் தேசிய வரவு செலவுத்திட்டத் திணைக்களத்தினால் செயற்படுத்தப்பட்டதுடன்செலவின முகவர்களின் எதிர்பாராத அல்லது அவசர மேலதிக நிதி தேவைகளுக்கு வசதியளிக்கும் வகையில் இந்த ஏற்பாடு செயற்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடானது2019இல் வரவு செலவுத்திட்ட முன்மொழிவுக்கான ரூபா 96 பில்லியன் உள்ளடங்களாக ரூபா 176 பில்லியனாகக் காணப்பட்டது.

அரசாங்கத்தால் செய்யப்பட்ட மொத்த செலவு மற்றும் கடன் திருப்பிச் செலுத்துதல் 2019 ஆம் ஆண்டில் ரூ .4,076 பில்லியனாக இருந்தது, அது 2.5 சதவீதம் அல்லது பெயரளவில் ரூபா2018 ல் 3,975 பில்லியன் ரூபாயுடன் ஒப்பிடும்போது 101 பில்லியன் அதிகரிப்பு.இருப்பினும், வருவாய் வசூல் பற்றாக்குறை காரணமாக, திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட செலவினங்களுடன் ஒப்பிடுகையில் உண்மையான செலவு ரூபா 652 பில்லியன் குறைந்துள்ளது.இருப்பினும், வருவாய் வசூல் பற்றாக்குறை காரணமாக, திருத்தப்பட்ட மதிப்பிடப்பட்ட செலவினங்களுடன் ஒப்பிடுகையில் உண்மையான செலவு ரூபா 652 பில்லியன் குறைந்துள்ளது.இதற்கிடையில், அரசாங்கத்தின் மூலதன செலவினங்களின் பயன்பாடு 2018 இல் 75 சதவீதத்திலிருந்து 2019 இல் 63 சதவீதமாக கணிசமாகக் குறைந்தது.எவ்வாறாயினும், தொடர்ச்சியான செலவினம், விருப்பப்படி இல்லாதது, ஓரளவு குறைந்து, 1 சதவிகிதம் மட்டுமே குறைந்து, 2018 இல் 97 சதவிகிதத்துடன் ஒப்பிடும்போது 96 சதவிகிதமாக இருந்தது.பெயரளவில்தொடர்ச்சியான செலவு ரூபா 2, 417 பில்லியனாகும்.

சட்டத்தின் முதல் அட்டவணை (ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதல் அட்டவணை அல்லது விநியோக சேவைகளுக்கான செலவு) மூலம் பெறப்பட்ட ஒதுக்கீட்டுச்

சட்டத்தின் 2 (1) பிரிவின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட விதிகளின் பயன்பாட்டு விகிதம் 2019 இல் 85 சதவிகிதம் வரை மோசமடைந்தது. 2018 இல் 86 சதவீதமும், 2017 ல் 87 சதவீதமுமாகக் காணப்பட்டது. செலவு ரூபா2,032 பில்லியன் ஆரம்ப மதிப்பீட்டிற்கு எதிராக ரூபா2,408 பில்லியன். கடந்த சில ஆண்டுகளில் இருந்து விலகி, சிறப்புச் சட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட செலவுகள் (நிதிக் குறியீடு 21- ஒதுக்கீட்டுச் சட்டத்தின் இரண்டாவது அட்டவணை) ரூ. 192 பில்லியன் ஆரம்ப மதிப்பீட்டிற்கு எதிராக ரூபா2,232 பில்லியன்.2018 உடன் ஒப்பிடும்போது, சிறப்புச் சட்டத்தின் கீழ் செலவினம் 83 பில்லியன் குறைந்து ரூபா 2,123 லிருந்து ரூ. சந்தையின் வட்டி விகிதம் எதிர்பார்த்தபடி அதிகரிக்காததால் ரூபா2,040 பில்லியன், கடன்களை மறுசீரமைத்தல் மற்றும் உண்மையான பரிமாற்ற வீதம் மதிப்பிடப்பட்ட அளவை விட குறைவாக இருந்தது.திட்டங்களின் பார்வையில், நிரல் 1 - செயல்பாட்டு நடவடிக்கைகள் மற்றும் நிரல் 2 - மேம்பாட்டு நடவடிக்கைகள் இரண்டும் கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது மேல்நோக்கிய போக்கைக் காட்டின. பெயரளவில், தொடர்ச்சியான செலவு ரூபா2,301 பில்லியன். செலவுச் சுருக்கம் பின்வருமாறு.

**அட்டவணை 2.5 : செலவின வகுதியின்படி அரசாங்க செலவினம் 2019**

| செலவின வகுதி | ரூபா பில்லியன் | மீண்டெழும் செலவின சதவீதம் | மொத்த செலவின சதவீதம் |
|---|---|---|---|
| மீண்டெழும் செலவினம் | **2,322** | **100** | **57** |
| மத்திய அரசாங்கத்தின் ஆள்சார் வேதானதிகள் | 709 | 31 | 17 |
| பிரயாணச் செலவினம் | 17 | 1 | 0 |
| வழங்கல்கள் | 112 | 5 | 3 |
| பராமரிப்புச் செலவினம் | 8 | 0 | 0 |
| சேவைகள் | 63 | 3 | 2 |
| மாற்றல்கள்(மாகாண சபைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களுக்கான மாற்றல்கள்) | 524 | 23 | 13 |
| வட்டிக் கொடுப்பனவுகள் மற்றும் கழிவு | 889 | 38 | 22 |
| ஏனைய மீண்டெழும் செலவினம் | 1 | 0 | 0 |
| **செலவின வகுதி** | **ரூபா பில்லியன்** | **மீண்டெழும் செலவின சதவீதம்** | **மொத்த செலவின சதவீதம்** |
| மூலதனச் செலவினம் | **637** | **100** | **16** |
| மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 27 | 4 | 1 |
| மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 114 | 18 | 3 |

| | | | |
|---|---|---|---|
| மூலதன மாற்றல்கள் | 121 | 19 | 3 |
| நிதியியற் சொத்துக்களின் கொள்வனவு | 37 | 6 | 1 |
| ஆற்றல் விருத்தி | 6 | 1 | 0 |
| ஏனைய மூலதன செலவினம் | 332 | 52 | 8 |
| | | | |
| பொது படுகடன் வளர்ச்சி | **1,117** | | **27** |
| | | | |
| மொத்தச் செலவினம் | **4,076** | | **100** |

# 3 வருடத்துக்கான ஒட்டுமொத்த நிதிச் செயலாற்றுகை

## 3.1 நிதிச் செயலாற்றகைப் பற்றிய கூற்று

**ஏசீஏ -எப்**

**2019 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று**

ரூபா

| வ. செ. திட்டம் 2019 | | குறிப்பு | உண்மையான 2019 | உண்மையான 2018 | |
|---|---|---|---|---|---|
| | **வருமான பெறுகைகள்** | | | | |
| - | வருமான வரி | **1** | - | - | |
| - | உள்ளூர் பொருட்கள், சேவைகளுக்கான வரி | **2** | - | - | **AC A-1** |
| - | சர்வதேச வர்த்தகம் மீதான வரி | **3** | - | - | |
| - | வரியல்லா வருமானம் மற்றும் பிற | **4** | 6,793,535 | 38,886,714 | |
| - | **மொத்த வருமான பெறுகைகள்(அ)** | | - | - | |
| - | **வருமானமல்லாத பெறுகைகள்** | | | | |
| - | திறைசேரி கட்டுநிதி வைப்புகள் | | 5,997,403,325<br>66,788,779 | 6,128,747,675<br>111,684,748 | **AC A-3** |
| - | முற்பணக் கணக்குகள் | | 10,991,606 | 9,646,528 | |
| - | வேறு பெறுகைகள் | | 115,132,025 | 7,808,724 | |
| - | **மொத்த வருமானமல்லாத பெறுகைகள்(ஆ)** | | **6,190,315,735** | **6,257,887,675** | |
| - | **மொத்த வருமான பெறுகைகள் மற்றும் வருமானமல்லாத பெறுகைகள்இ = (அ)+(ஆ)** | | **6,197,109,270** | **6,296,774,389** | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கழி – செலவினங்கள் | | | | |
| | மீண்டும்வரும் செலவினம் | | | | |
| - | வேதனாதிகள், சம்பளங்கள், பிற ஊழிய நனமைகள் | 5 | 99,484,154 | 92,674,562 | |
| - | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகள் | 6 | 605,683,285 | 1,146,400,753 | ACA-2(ii) |
| - | உதவுதொகை, மானியம், மாற்றல்கள் | 7 | 33,520,361 | 52,769,743 | |
| - | வட்டிக் கொடுப்பனவுகள் | 8 | | - | |
| - | பிற மீண்டெழும் செலவினம் | 9 | - | - | |
| - | மொத்த மீண்டெழும் செலவினம் (ஈ) | | **738,687,800** | **1,291,845,058** | |
| | மூலதனச் செலவினம் | | | | |
| - | மூலதனச் சொத்துக்களின் புனரமைப்பு மற்றும் மேம்பாடு | 10 | 629,148 | 798,284 | |
| | மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு | 11 | 5,324,979,279 | 4,950,366,459 | |
| - | மூலதன மாற்றல்கள் | 12 | - | - | ACA-2(ii) |
| - | நிதி சொத்துக்களின் கொள்வனவு | 13 | - | - | |
| - | திறன் விருத்தி | 14 | 3,111,757 | 1,454,781 | |
| - | பிற மூலதனச் செலவினம் | 15 | - | - | |
| - | மொத்த மூலதனச் செலவினம் (உ) | | **5,328,720,184** | **4,952,619,524** | |
| | பிரதான பேரேட்டுச் செலவினம் (ஊ) | | **127,240,264** | **12,323,713** | |
| | வைப்புக் கொடுப்பனவு | | 116,859,279 | 511,954 | ACA-4 |
| | முற்பணக் கொடுப்பனவு | | 10,380,984 | 11,811,759 | ACA-5 |
| | மொத்தச் செலவினம் எ = (ஈ+உ+ஊ) | | 6,194,648,247 | 6,256,788,295 | |
| - | 2019 டிசம்பர் 31 அன்றுள்ள கட்டுநிதி மீதி ஏ = (இ-எ) | | **2,461,022** | **39,986,094** | |

## 3.2 நிதி நிலைமை பற்றிய கூற்று

**ஏசீஏ-பீ**

## 2019 டிசம்பர் 31 முடிவுற்ற காலத்திற்கான நிதி நிலைமை பற்றிய கூற்று

| | குறிப்பு | உண்மையான 2019 ரூபா | உண்மையான 2018 ரூபா |
|---|---|---|---|
| <u>**நிதியல்லா சொத்துக்கள்**</u> | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் | | | |
| <u>**நிதி சொத்துக்கள்**</u> | **ACA-6** | 21,737,380,974 | 24,907,860,401 |
| முற்பணக் கணக்குகள் | | | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | | | |
| **மொத்த ஆதனம்** | **ACA-5/5(a)** | 26,471,732 | 27,082,353 |
| <u>**தேறிய சொத்துக்கள்/ பங்கு**</u> | **ACA-3** | 635,608 | 83,325 |
| நிகர சொத்து | | | |
| சொத்து,பொறித்தொகுதி உபகரண ஒதுக்கு | | **21,764,488,314** | **24,935,026,080** |
| வாடகை, பணி முற்பண ஒதுக்கு | | | |
| <u>**நடைமுறை பொறுப்புக்கள்**</u> | | | |
| வைப்புக் கணக்கு | | (151,062,508) | (200,439,062) |
| முற்பண மீதி | | | |
| **மொத்த பொறுப்புக்கள்** | **ACA-5(b)** | 21,737,380,974 | 24,907,860,401 |
| <u>**நிதியல்லா சொத்துக்கள்**</u> | | | |
| ஆதனம், பொறித்தொகுதி, உபகரணம் | | | |
| <u>**நிதி சொத்துக்கள்**</u> | | | |
| முற்பணக் கணக்குகள் | | | |
| காசு மற்றும் காசுக்கு சமனானவை | **ACA-4** | 177,534,240 | 227,604,740 |
| | **ACA-3** | 635,608 | |
| **மொத்த ஆதனம்** | | **21,764,488,314** | **24,935,026,079** |

Detail Accounting Statements in ACA format Nos. 1 to 6 presented in pages from 05 to 145 and Notes to accounts presented in pages from 146 to 153 form and integral parts of these Financial Statements. The Financial Statements have been prepared in complying with the Generally Accepted Accounting Principles whereas most appropriate Accounting Policies are used as disclosed in the Notes to the Financial Statements and hereby certify that figures in these Finacial Statements, Notes to accounts and other relevant accounts were reconciled with the Treasury Books of Accounts and found to in agreement.

Chief Accounting Officer
Name : S.R.Attygalle
Designation : Secretary
Ministry of Finance, Economic and Policy Development
Date : 26.02.2020

S. R. Attygalle
Secretary to the Treasury and Secretary to the Ministry of Finance, Economy and Policy Development
The Secretariat
Colombo 01

Accounting Officer
Name : Jude Nilukshan
Designation : Director General
